பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 25 வெள்ளிக்கிழமை 09.02.2024 கதிர் 94

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் இலங்கை ஒருபோதும் முன்னேறாது

## ரணிலின் கொள்கை விளக்க உரையினை நிராகரித்து சுமந்திரன் எம்.பி. மன்றில் உரை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தடவை கொள்கை விளக்க உரையில் 'இனப்பிரச்சினைக்குத் தீர்வு' குறித்து ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை. பொருளாதார பாதிப்புக்கு அடிப்படை காரணியாக உள்ள தமிழ்த் தேசிய பிரச்சினைக்குத் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

சமுதாய மருத்துவத்துறை மருத்துவரான முரளி வல்லிபுரநாதன் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரான சிறீதரனுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதைப் போன்று கடந்தகாலங்களில் சிறீதரன் ஆற்றிய வினைகளின் விளைவுகளாக அவரது கடிதம் அமைந்துள்ளது. நிச்சயம் அந்தக் கடிதத்துக்குச் சிறீதரன் பதில் தரமாட்டார். ஆனால். அரசியல் ரீதியாக அவர் எவ்வளவு பலவீனமான பக்கத்தில் இருக்கிறார் என்பதை அவருக்கு உணர்த்தும் வகையில் இந்தக் கடிதம் அமைந்துள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மதிப்புக்குரிய தமிழரசு கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் ☞ 2

## ஜனாதிபதி நேற்று ஆஸி. பயணம்

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று அதிகாலை ஆஸ்திரேலியா பயணமானார்.

இந்தியா மன்றம் மற்றும் ஆஸ்திரேலிய அரசின் அழைப்பின் பேரில் இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி சென்றுள்ளார். ஏழாவது இந்து சமுத்திர மாநாடு பெப்ரவரி மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் ☞ 8

## எரிபொருள் கையிருப்பு பெருமளவில் உண்டு

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

அண்மைக்கால வரலாற்றில் மிகப்பெரிய அளவிலான எரிபொருள் கையிருப்பை வலுசக்தித் தேவைக்காக, 200 மில்லியன் டொலர்கள் மேலதிக கையிருப்பு மற்றும் ஒரு வாரத்திற்கு அவசியமான டொலர்களை அதே வாரத்தில் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி. வீ. சானக தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடினமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு நாடு படிப்படியாக மீண்டு வரும் சூழ்நிலையில் நாம் தற்போது இருக்கிறோம். ஒரு காலத்தில் நாம் அனைவரும் ☞ 2

## சாந்தனுக்கு கடவுச் சீட்டு அனுப்பி வைக்கப்பட்டது

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகத் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தனை இலங்கைக்குத் திருப்பி அழைத்து வருவதற்கான தற்காலிக ஒரு நாள் கடவுச்சீட்டு இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டதிட்டங்களின் அமைவாக அவருக்குரிய கடவுச்சீட்டு (Passport) அனுப்பி வைக்கப்பட்டது என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய வெளியுறவுத்துறைக்குச் சாந்தனுடைய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை அயலுறவுத்துறை அமைச்சால் அறியத்தரப்பட்டுள்ளது.

இதன்படி, சாந்தன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் வரும் நாட்களில் இந்திய ☞ 8

## தவிசாளர் குழாத்திற்கு உறுப்பினர்கள் நியமிப்பு

தவிசாளர்குழாத்திற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சாபாநாயகர் மஹிந்த யாப்பா அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் தொடங்கியபோது, அவர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 143 இன் பிரகாரம் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரின் போது சேவை யாற்றுவதற்காகக் கீழ் ☞ 2

## வாக்காளர் டாப்பில் அனைவரும் பெப். 23க்கு முன்னர் பதியுங்கள்

### தேர்தல்கள் அணைக்குழு வலியுறுத்து

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில், பெப்ரவரி 29 க்கு முன்னர் பெயர்களை பதிவுசெய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இந்த விடயம் சம்பந்தமாக தெரிவித்துள்ளதாவது,

ஒரு வீட்டிலிருந்து சமர்ப்பிக்கப்படும் வாக்காளர் பட்டியலில் 18 வயதுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அனை ☞ 2

## ஜகத் பிரியங்கர நேற்று எம்.பியாக பதவியேற்பு

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் உறுப்பினராக ஜகத் பிரியங்கர நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்ட பின்னர் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்திய புத்தளம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ சனத் நிஷாந்தவின் மறைவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஜகத்பிரியங்கர இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

1979இல் பிறந்த ஜகத் பிரியங்கர திக்வல்லை அரச பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், இரண்டாம் நிலைக் கல்வியை வென்னப்புவ ஜோசப் வாஸ் மத்திய கல்லூரியிலும் நிறைவு செய்துள்ளார். அவர் களனிப் பல்கலைக் கழகத்தின் இளங்கலைப் பட்டதா ☞ 2

## சனத் நிசாந்தவின் மறைவுக்கு அனுதாபம்

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த அவர்களது மறைவை இந்த நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பதாக சபாநாயகர் சபையில் தெரிவித்தார். அவரது மறைவினால் ஏற்பட்ட இழப்பு குறித்து அதிகம் வருந்துவதோடு கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரின் குடும்பத்தினருக்கு நாடாளுமன்றம் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாக சபாநாயகர் அறிவித்தார். இது தொடர்பான அனுதாபப் பிரேரணை பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கை நாடாளுமன்ற படைக்கலச்சேவிதர் பதவிக்காக, பிரதி படைக்கலச் சேவிதர் அதிகாரம்கே குஷான் சம்பத் ஜயரத்ன அவர்கள் 2024 சனவரி 31 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

## குறுகிய காலக் கடன்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன

இலங்கை மத்திய வங்கியினால், வணிக வங்கிகளுக்கு குறுகிய காலகடன்களை வழங்குவதற்கு அமுல்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன.

பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாணயக் கொள்கை சபை நேற்று கூடிய போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மத்திய ☞ 8

## பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களிடமிருந்து இழப்பீடுகள் வசூலிக்கப்படும்

### தமது ஆட்சியில் நடக்கும் என்கிறார் சஜித்

நாடு வங்குராத்தே நிலைக்கு செல்ல காரணமானவர்கள் என உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியவர்களிடமிருந்து நாட்டு மக்கள் இழப்பீடு பெற எமது ஆட்சியில் நடவடிக்கை எடுப்போம். அத்துடன் நிகழ்நிலை காப்புச்சட்டத்தையும் மறுசீரமைப்பு ☞ 2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக மேலும் வழக்குகள் தாக்கல்

பயங்கரவாத எதிர்ப்பு எனும் சட்டமூலத்துக்கு எதிராக மேலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் ஆரம்பமாகியபோது, அவர் விடுத்துள்ள அறிவிப்பில் இதனைத் தெரிவித்தார்.

2024 ஜனவரி 23 ஆம் திகதிய எனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஆறு மனுக்கள் மற்றும் 2024 சனவரி 24 ஆம் திகதிய எனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பதினெட்டு மனுக்களுக்கு மேலதிகமாக, அரசமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'பயங்கரவாத எதிர்ப்பு' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் 6 மனுக்களின் பிரதிகள் தனக்குக் கிடைத்திருக்கின்றது என்றார்.

## 19 இந்திய மீனவர்கள் கைது

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த 19 பேரும் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் ஊடாகசட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

## இனி இது .....

அவர்களே!

தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றமைக்கு எனது வாழ்த்துகளை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளை தமிழர்களின் அதிகளவு வாக்குகளை பெறும் கட்சியின் தலைவராக நீங்கள் பொறுப்பு எடுக்கும் நிலையில் தமிழினத்தின் தேசியநலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுவீர்கள் என்று தமிழ் மக்களாகிய நாங்கள் அனைவரும் பெரும் நம்பிக்கையுடன் இருக்கிறோம். இந்த நிலையில் கடந்த காலத்தில் நீங்கள் சில விடயங்களில் செயல்பட்ட விதம் குறித்து தெளிவுபடுத்துவது அனைவரது சந்தேகங்களையும் நீக்குவதோடு எதிர்காலத்தில் உங்களுடைய செயல்பாடுகளுக்கான ஆதரவையும் அதிகரிக்கும்.

1. கிளிநொச்சியில் உள்ள இரணைமடுக்குள நீர் ஒவ்வொரு வருடமும் வான் பாய்ந்து கடலுக்குள் வீணாக செல்வதை அனைவரும் அறிவோம் என்பதுடன் தொழில்சார் வல்லுநர்கள் அதில் ஒரு பகுதியை யாழ்ப்பாணத்துக்கு குடிநீராக வழங்கலாம் என்று சிபாரிசு செய்திருந்தார்கள். 2023 இல் கூட பெருமளவு நீர் இரணைமடுவில் இருந்து வான் பாய்ந்து கடலுக்குள் சென்று வீணாகியது. ஆனால் நீங்கள் 'இரணைமடு தண்ணீரை யாழ் மாவட்டத்திற்கு வழங்க முடியாது, கிளிநொச்சி மக்களுக்கே அந்த நீர் போதாது' என்பதே உங்களுடைய உறுதியான நிலைப்பாடு என்று தொடர்ச்சியாக கூறி வந்துள்ளதுடன் யாழ்ப்பாணத்துக்கு நீரை வழங்க மாற்று திட்டமொன்றை தேட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்து இருந்தீர்கள் (ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது). இப்போது தமிழரசுக் கட்சியின் தேசிய தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் யாழ் மாவட்டத்திற்கும் குடிநீரை வழங்க வேண்டிய தார்மீக பொறுப்பை நீங்கள் கொண்டிருக்கும் வேளையில் தங்களுடைய தற்போதைய நிலைப்பாட்டையும் மாற்று திட்டத்தையும் அறிய ஆவலாக இருக்கிறோம்.

2. நீங்கள் கடந்த காலத்தில் 103 போராளிகள் விஷ ஊசியினால் இறந்தார்கள் என்றும் இன்னும் பலர் நோய்வாய்ப்பட்டு இருப்பதாகவும் இது தொடர்பான ஆதாரங்கள் உங்களிடம் இருப்பதாகவும் சர்வதேச பாதுகாப்பு வழங்கப்பட்டால் இதை நிரூபிப்பேன் என்று தெரிவித்து இருந்தீர்கள் (ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது ). விஷ ஊசி முன்னாள் போராளிகளுக்கு ஏற்றப்பட்டதாக நீங்கள் தெரிவித்த கருத்தால் பல முன்னாள் போராளிகள் குறிப்பாக பெண்கள் திருமண பந்தத்தில் இணைய முடியாமல் சமூகத்தினால் களங்கப்படுத்தப்பட்டு (விமிஷ்ஆதுழி) நோயாளிகளாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். முன்னாள் போராளிகளை பரிசோதித்த நானும் ஏனைய மருத்துவ நிபுணர்களும் விஷ ஊசி ஏற்றப்பட்டதற்குஎந்த ஆதாரத்தையும் இதுவரை கண்டுபிடிக்காத நிலையில் உங்களிடம் இருப்பதாக தெரிவித்த ஆதாரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தற்போது தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பிரித்தானிய தூதுவர் உட்பட சர்வதேச தூதுவர்களை சந்தித்து கலந்துரையாடி கருத்துக்களை தெரிவிக்கும் பாதுகாப்பான சூழலில் நீங்கள் இருக்கும் இந்தப் பொன்னான தருணத்தில் உங்களிடம் இருக்கும் விஷஊசி தொடர்பான ஆதாரங்களை வெளிப்படுத்த முன்வருவீர்களா

3. தமிழரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தல் இடம்பெறும் போது சிவசேனை சச்சிதானந்தன் முதல் இந்தியாவின் மேளத்துக்கு தாளம் போடுபவர்கள் அனைவரும் உங்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆனால் இந்தியா '13ம் திருத்தத்தில் கூறப்பட்ட அதிகாரப் பகிர்வுக்கு அப்பால் இலங்கையில் தமிழருக்கு எதையும் வழங்க தயாரில்லை' என்பதை தொடர்ந்து தெரிவிக்கும் நிலையிலும் நீங்கள் தமிழரசுக் கட்சியின் 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி தீர்வு' என்ற நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது ஈழத்து தமிழ் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி உள்ளது. ஆயினும் அந்த தீர்வை அடைவதற்கான உபாயம் மீண்டும் ஒரு தடவை இன்னொரு இளைய தலைமுறை தமிழர்களை உணர்ச்சிவசப்படுத்தி இரத்தக் களரியை ஏற்படுத்துவதாக அமைந்துவிடக்கூடாது. ஏற்கனவே எனது குடும்பம் உட்பட பல தமிழர் குடும்பங்கள் உயிரிழப்புக்களையும் பேரழிவுகளையும் சந்தித்து பெருமளவு தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் ஈழத்தமிழர்களின் குடித்தொகை நலிந்து முதலாவது சிறுபான்மையின நிலையில் இருந்து இரண்டாவது சிறுபான்மையினராகும் பேரபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில் உசுப்பேத்தும் அரசியலை விடுத்து ஈழத் தமிழர்களை பலப்படுத்தி சமஷ்டி தீர்வை அடைவதற்கு உங்களின் உபாய மார்க்கம் அல்லது வழி வரைபடம் என்ன என்பதை தமிழர்கள் அனைவரும் அறிய விழைகிறோம்.

நன்றி

இப்படி அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்சியில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டாலும்கூட இன்னும் தலைவராகப் பொறுப்பேற்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கும் சிறீதரன் இதுபோன்ற சவால்களையும் எப்படிச் சமாளிக்கப்போகிறார் என்பது கேள்விக்குறிதான். எல்லாவற்றுக்கும் பதிலளிக்காமல் ஆறப்போட்டுவிட்டுப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்று இருப்பாரானால் தோல்வி நேரத்தில் பின்னர் இவையெல்லாம் எழுந்து நின்று ஆடும் என்பதையும் அவர் உணரவேண்டும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இனப்பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணாமல் ஒருபோதும் நாடு முன்னேற முடியாது. ஆகவே ஜனாதிபதியின் கொள்கை உரையை நிராகரிக்கிறோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையின் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டதாக வெற்றி வார்த்தைகளைக் குறிப்பிட்டார். ஆனால் உண்மையில் எவ்வித முன்னேற்றமும் இதுவரை எட்டப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் இரவல் வாங்குவது மாத்திரம் ஆட்சியாளர்களின் பிரதான வெற்றியாகக் காணப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். தேர்தல்களை நடத்தும் திகதியை ஜனாதிபதி தீர்மானிக்க முடியாது. இது ஜனநாயக நாடே தவிர சர்வாதிகார நாடல்ல. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்பின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது நிதி விடுவிப்பை ஜனாதிபதி தடுத்தார். அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பணிகள் நின்று போயின. இதனை வன்முறை என்றே குறிப்பிடவேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து தனிநபர் பிரேரணையை முன்வைத்துப் பல யோசனைகளை முன்வைத்துள்ளேன். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு மாத்திரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜனாதிபதியின் அறிவிப்புக்கள் மீது ஒருபோதும் நம்பிக்கை கொள்ள முடியாது.

ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் நாடாளுமன்றத்துக்கு வருகைதந்து 'இனப்பிரச்சினைக்கு உடனடியான தீர்வு காண்போம், நான் தயார், நீங்கள் தயாரா; எனப் பெயர் குறிப்பிட்டு வினவினார்.

2022ஆம் ஆண்டு நவம்பர் மாத காலப்பகுதியில் 3 தடவைகள் அனைத்துக்கட்சிக்கூட்டத்தை நடத்தி 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகப் பறைசாற்றினார். 76 ஆவது சுதந்திர தினமும் கொண்டாடப்பட்டு, ஆனால் கொள்கை பிரகடனத்தின் இனப்பிரச்சினை பற்றி அவர் ஏதும் பேசவில்லை.

அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு அழைப்பு விடுத்த போது, இது வெறும் வாக்குறுதிகள் மாத்திரமே மக்களாணை இல்லாத நிலையில் ஏதும் செய்ய முடியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வை எதிர்க்கும் போலி பெரும்பான்மையுள்ள தரப்பினரை வைத்துக் கொண்டுள்ள ஜனாதிபதியால் தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியாது என்று குறிப்பிட்டோம்.

அத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுக்களில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை, தடையாகச் செயற்பட்டோம் என்று எவரும் குறிப்பிடக்கூடாது என்பதற்காகக் கூட்டங்களில் கலந்து கொண்டோம் என்பதையும் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம். இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட்டோம். ஆனால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.

அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் எமது கட்சியின் தலைவர் சம்பந்தன் அவர்கள் ஜனாதிபதியைப் பார்த்து 'இந்த கூட்டத்தில் எடுக்கப்படும் ஒரேயொரு முடிவுதான் நடைமுறைப்படுத்தப்படுகிறது' என்று குறிப்பிட்டார். அது என்னவென்று ஜனாதிபதி கேட்டபோது சம்பந்தன் அவர்கள் 'அடுத்த கூட்டத்துக்கான திகதி' என்று பதிலளித்தார்.

கூட்டங்களை நடத்தி பேச்சுக்கள் ஊடாக தீர்வு காண்போம் என்று குறிப்பிடுவதை மாத்திரம் பழக்கமாகக் கொண்டுள்ள ஜனாதிபதி குறிப்பிடப்பட்ட விடயங்களை மறுதலிக்கும் வகையில் கொள்கை விளக்க உரை ஆற்றியுள்ளார். தமிழ்த் தேசிய பிரச்சினை இந்த நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு அடிப்படை காரணியாகக் காணப்படுகிறது. இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்பின் ஊடாக தீர்வு காணாமல் ஆயுதம் ஊடாக தீர்வு வழங்குவதற்காகக் கடன் பெற்று பொருளாதார பாதிப்பை அரசே தோற்றுவித்தது என்பதைக் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

உண்மையை மக்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள். இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மக்கள் விழிப்புடன் தக்க பதிலளிக்க வேண்டும். தமிழ்த் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இந்த நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது என்பதைக் குறிப்பிட்டுக்கொள்கிறேன் என்றார்.

## வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடையதும் அல்லது வீட்டில் தங்கியுள்ள அனைவரினதும் தகவல்களை உள்ளடக்குவது கட்டாயமாகும்.

நிரந்தர வதிவிடத்தை மாற்றாது, திருமணம், கல்வி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக வசிப்பிடத்தை மாற்றிய அனைவரும் வாக்காளர் இடாப்பில் தமது பெயரை பதிவு செய்ய வேண்டும்.

குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் வசிக்கும் பட்சத்தில், அவர்களுக்கு வாக்களிக்க முடியாவிட்டாலும் அவர்களது பெயர்களும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றுள்ளது.

## பொருளாதார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான பிரதான கருவி தனியார் துறையாகும். இதன் மூலம் நாட்டின் விரைவான பொருளாதார அபிவிருத்தியை நாங்கள் எதிர்பாக்கிறோம்.

அதேபோன்று எமது ஆட்சியில் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் முறையான முகாமைத்துவத்துக்கு உட்படுத்தி, தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தத்தில் கலந்துரையாடல் மூலம் திருத்தங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

இதன்மூலம் நாணயநிதியத்தை புறக்கணித்து செயற்படுவதென யாரும் அர்த்தம் கொள்ளக்கூடாது. நாணய நிதியத்துடன் இணைந்து கொண்டே இந்த பயணத்தை நாங்கள் மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் எமது பொருளாதார கொள்கையின் மூலம் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தை நாங்கள் செயற்படுத்துவோம்.

அதேபோன்று நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் நோக்கில் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை மேலும் பலப்படுத்துவதுடன் அந்த சட்டத்தை எமது அரசியலமைப்பில் ஓர் பிரிவாக கொண்டுவர நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் நாட்டின் ஏற்றுமதி துறை வீழ்ச்சியடைந்துள்ளது. ஏற்றுமதி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கத்திடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை. அதனால் நாட்டின் ஏற்றுமதி பொருளாதாரத்தை பலப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும்.

அதற்கான வேலைத்திட்டத்தை நாங்கள் முன்னெடுப்போம். மேலும் நாட்டின் பொருளாதாரத்தின் என்ஜினாக இருப்பது சிறிய, நடுத்தர, நுண் தொழிற்சாலைகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களாகும். நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 50வீத பங்களிப்பை வழங்கி வருகின்றன.

ஆனால் பராடே சட்டத்தின் மூலம் இந்த பிரிவினர் பாரியளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அரசாங்கம் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறது.

அதனால் எமது அரசாங்கத்தில் ஏழை எளிய மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் ஒன்றை நாங்கள் முன்னெடுப்போம். மாறாக அஸ்வெசும போன்ற தேர்தலை இலக்குவைத்து ஏழை மக்களுக்கு சிறியதொரு தொகையை கையளிப்பது போன்று அல்ல.

மேலும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் எமது திட்டத்தில் நாடு இழந்த வளங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள நாங்கள் செயற்படுவோம்.

அதேபோன்று நாடு வங்குரோத்து நிலைக்கு செல்ல காரணமானவர்கள் என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கமைய, அந்த தலைவர்களிடமிருந்து நாட்டு மக்கள் நஷ்டஈடு பெற்றுக்கொள்ளும் வகையில் நாங்கள் எமது அரசாங்கத்தின் நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாங்கள் சமர்ப்பித்திருக்கும் திட்டங்களில் கல்வி துறையில் மாற்றம், தகவல் தொழில்நுட்பத்துறையை விரிவுபடுத்தல், விவசாயம், கைத்தொழில் துறையை விருத்தி செய்தல், புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை பலப்படுத்தல், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சுதந்திர ஊடகத்தை பாதுகாத்து தற்போதுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டத்தை மறுசீரமைப்பு செய்து அனைத்துதரப்பினருடன் கலந்துரையாடி முறையான சட்டத்தை கொண்டுவருவோம் என்றார்.

## எரிபொருள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் வரிசையில் நின்றோம். அனைவரின் அர்ப்பணிப்புடனும், நிலையான எரிபொருள் விநியோகத்தைப் பேண முடிந்துள்ளது. அண்மைக்கால வரலாற்றில் தற்போது மிகப்பெரிய அளவிலான எரிபொருள் கையிருப்பு வைத்திருக்கிறோம். பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் டொலர்களின் சேமிப்பையும் எம்மால் பேண முடிந்துள்ளது.

வலுசக்தித் தேவைக்காக, 200 மில்லியன் டொலர்கள் மேலதிக கையிருப்பு மற்றும் ஒரு வாரத்திற்கு அவசியமான டொலர்களை அதே வாரத்தில் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இன்றைய நிலவரப்படி, ஒட்டோ டீசல் மெட்ரிக் டொன் 130,791, பெட்ரோல் 92 ஒக்டென் மெட்ரிக் டொன் 83,275 சூப்பர் டீசல் மெட்ரிக் டொன் 8313 பெட்ரோல் 95 ஒக்டென், மெட்ரிக் டொன் 11,196 விமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஜெட் ஏ1 (மூசிவீ பு1) மெட்ரிக் டொன் 17,274 மற்றும் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் எரிபொருள் (குழு) 75,410 மெட்ரிக் டொன் என்ற விதத்தில் பேணப்படுகிறது. மேலும், டெண்டர் நடைமுறையின்படி, அடுத்த 6 மாதங்களுக்குத் தேவையான எரிபொருளைப் பெறுவதற்கு நீண்ட கால ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிந்துள்ளது. டிசெம்பரில் மாதத்தில் இருந்து ஏப்ரல் மாத நடுப்பகுதி வரை, உலகில் எரிபொருள் விலை உயர்வு இயல்பான சூழ்நிலையாகிவிட்டது. இதற்குக் காரணம், ஐரோப்பாவில் குளிர்காலம் தொடங்கியுள்ள நிலையில், எரிபொருள் பயன்பாடு அதிகமாக உள்ளது. அந்தக்காலக்கட்டத்தில் கேள்வி அதிகரிப்புடன் ஒவ்வொரு ஆண்டும் விலை உயர்வு ஏற்படும் என்பதைக் கூறவேண்டும். அதன்படி, குளிர்காலம் முடிவடையும் நிலையில், மார்ச் மாதத்துக்குப் பிறகு எரிபொருள் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பயனை வாடிக்கையாளருக்கு அளிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

2022ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் தாமதக் கட்டணம் செலுத்தவேண்டி ஏற்பட்டது. ஆனால் 2023 இல், நாங்கள் ஒரு புதிய பொறிமுறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தோம். கப்பல்கள் துறை முகத்திற்கு வந்தவுடன் அவற்றை களஞ்சியப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னர் எம்மிடம் உள்ள டொலர்களை செலுத்தி எரிபொருள் கொள்வனவு செய்தோம். அந்த முறையின் மூலம், 15 ஆண்டுகளுக்குப் பிறகு, தாமதக் கட்டணமாக ஒரு ரூபாய்கூடச் செலுத்தவில்லை.

இதுவரை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் வழக்கமான முறைப்படி டெண்டர் முறையிலேயே எரிபொருள் கொள்வனவு செய்துவந்தது. ஆனால் எதிர்காலத்தில் டெண்டர்களை கோருவதற்கு ஏல விற்பனை முறையை அறிமுகப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதுவரை அதன் 95% பணிகளை எம்மால் நிறைவு செய்ய முடிந்துள்ளது. எரிபொருள் களஞ்சிய முனையம், நமக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குகிறது. உலகில் நிலவும் புதிய தொழில்நுட்பங்களை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் கட்டணத்தை மேலும் குறைக்க முடியும் என நாம் நம்புகிறோம். 2022 இல் 22% ஆக இருந்த தவணை எண்ணிக்கையை 2023 ஆம் ஆண்டுக்குள் 5% முதல் 03 ஆக குறைக்க முடிந்தது.

2ஆண்டுகளுக்குப்பிறகு, 2024 கப்பல்களுக்கான எரிபொருள் நிரப்பும் செயல்பாட்டு(ஹூஜஸவஷஷஆ விதிவிமினது)பொறிமுறை தொடங்கப்பட்டது. இதன்மூலம் மின்உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் (குழு) 5,200 மெற்றிக் டொன்களை கப்பல்களுக்கு விற்பனை செய்வதற்கும் 3 மில்லியன் டொலர்கள் வருமானம் ஈட்டவும் முடிந்துள்ளது. மேலும், கப்பல்களுக்கு டீசல் நிரப்பும் பணி மிகக் குறுகிய காலத்தில் தொடங்கப்படும்' என்றார்.

## ஜகத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரியுமாவார்.

2015 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்ட ஜகத் பிரியங்கர 31,424 விருப்பு வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் ஐந்தாவதாகத் தெரிவானார். மீண்டும் 2017 இல் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அவர் அதில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். 2020 இல் பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு 40,724 வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் ஆறாவதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சமுர்த்தி முகாமையாளரான ஜகத் பிரியங்கர, சமுர்த்தி தேசிய அமைப்பு மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளருமாவார். இவர் தினமின, லங்காதீப மற்றும் மவ்பிம ஆகிய பத்திரிகைகளில் ஊடகாவியலாளராகவும், சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளராகவும் செயற்பட்ட மறைந்த எல்.கே. சாம்சன் ஜயந்தவின் புதல்வராவார். 2007 இல் எம்.வீ. தேதுனுவை மணந்த ஜகத் பிரியங்கர மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இயற்கை முறையில் பயிரிடப்பட்ட வேளாண்மையின் அறுவடை விழா





(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறைமாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டு விளைந்த நெல் அறுவடை விழா நாவிதன்வெளியில் நடைபெற்றது. நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குப்பட்ட 15 ஆம் கிராம வேப்பையடி கிராம குழு உறுப்பினர்கள் 22 பேருக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இயற்கை முறையில் விவசாயத்தை மேற்கொள்வதற்காக விதை நெல் வழங்கப்பட்டு விதைப்பு செய்யப்பட்டது. அந்த வேளாண்மை அறுவடை விழா பாரம்பரிய முறைப்படி ஆரம்பிக்கப்பட்டு அறுவடை செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமை தாங்கினார். மேலும் அமைப்பின் நாவிதன்வெளி கள உத்தியோகத்தர் ராஜினி மற்றும் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (05)

## ஊடகவியலாளர்களுக்கு கிழக்கில் செயலமர்வு!





(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாண பிரதேச தெரிவு செய்யப்பட்ட ஊடகர்களுக்கான செயலமர்வொன்று திருகோணமலையில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் நேற்று (வியாழக்கிழமை)இடம்பெற்றது.

இன்று(வெள்ளிக்கிழமை) உட்பட இரு நாள்கள் நடை பெறவுள்ள குறித்த செயலமர்வை வெகுசன ஊடக அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

இதில் வெறுப்புப் பேச்சு, தொடர்பாடல் முறை உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

முதல் நாளாகிய நேற்றைய தினம் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் வி.பி.கே.அனுச பல்பிட்ட கலந்து கொண்டு கருத்துரைத்தார்.

ஊடகவியாளர்களுக்கான கொள்கைகளை ஊடகவியலாளர்களே உருவாக்க வேண்டும் எதிர்காலத்தில் ஊடக பட்டய நிறுவனம் ஒன்றை உருவாக்கி தொழில்வாண்மையான ஊடகர்களை உருவாக்கவுள்ளோம் இந்த திட்டம் ஊடாக செய்தி ஆசிரியர்கள், பிரதேச ஊடகர்கள் என சுமார் 450 ஊடகர்களுக்கு பயிற்சி அளித்துள்ளோம். - என்றார்.

இதில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழி தொடர்பாடல் துறை பீடத்தின் விரிவுரையாளர் கலாநிதி வி.ஜெ.நவீன் ராஜ், சட்டத்தரணி ஜகத் லியானாராய்ச்சி, சுயாதீன ஊடக வலையமைப்பின் தலைவர் சுதர்சன குணவர்தன உட்பட வெகுசன ஊடக அமைச்சின் அதிகாரிகள், பிரதேச ஊடகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர .(05)

## அடிப்படை வசதிகளற்ற கல்லரிப்பு பழங்குடி கிராமத்தில் பொங்கல்





(வி.ரி. சகாதேவராஜா)

வாகரை பிரதேசத்தில் உள்ள வெருகல் கல்லரிப்பு பழங்குடிக் கிராமத்தில் வள்ளுவம் அமைப்பின் பொங்கல் விழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக கிராமிய சூழலில் இடம்பெற்றது.

அடிப்படை வசதிகள் எதுவுமற்ற கல்லரிப்புக் கிராமத்தில் வள்ளுவம் அமைப்பு பொங்கலுக்கென புதிய உடுப்புகள் பொங்கல் பானை முதல் சகல பொருள்களையும் வழங்கி இந்த பொங்கல் விழாவை நடத்தி வைத்தனர்.

அங்கு மலையக மக்களின் 200 வருட வாழ்வியல் சரிதத்தை பிரதிபலிக்கும் சிறப்பு நிகழ்ச்சி அம்சங்களும் அங்கே இடம்பெற்றன.

கொழுந்து பறித்தல் தொடக்கம் மலையக கலை கலாசார பாரம்பரியங்களைப் பறைசாற்றும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை வைத்தியசாலை வீதி என்று எந்த அடிப்படை வசதியும் அற்ற கல்லரிப்பு கிராமத்தில் 40 பழங்குடி குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

வள்ளுவம் அமைப்பினர் இந்த பொங்கல் விழா வழக்கம் போல செய்தனர். சமூக செயற்பாட்டாளர் ஆசிரியை மலர்ச்செல்வி இதற்கான ஒழுங்கமைப்பை மேற்கொண்டிருந்தார்.

வள்ளுவம் அமைப்பு அந்தக் கிராமத்தைத் தத்தெடுத்து சகல தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## பெரும்போக வேளாண்மை செய்கை அறுவடையில் பெரும் வீழ்ச்சி நிலை

(ஹஸ்பர் ஏ.எச்)

தற்போது பெரும்போக நெற் செய்கை அறுவடை இயந்திரம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் இம் முறை அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குப்பட்ட பத்து ஏக்கர் வன்னியனார் மடு விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சீரற்ற காலநிலை காரணமாக பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையாலும் ஒரு வகையான நோய் தாக்கம் ஏற்பட்டமையால் நெற் செய்கை அழிவடைந்துள்ளதுடன் விளைச்சலில் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். ஓர் ஏக்கருக்கு எட்டு தொடக்கம் பத்து மூடைகளுக்கும் குறைவாகவே கிடைக்கப் பெறுகின்றது. நெல்லுக்கான உத்தரவாத விலை இன்மை தற்போது ஒரு மூடை 5500 வரை செல்கிறது வெட்டுக் கூலி 17000 ரூபா என பல செலவுகள் போக மிஞ்சி இருப்பது எதுவுமே இல்லை எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். குறித்த இப் பகுதியில் 2000 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே பசளைகளை உரிய நேரத்தில் பசளைகளாக தருமாறும் தரமான கிருமி நாசினிகளை விவசாயிகளுக்காகக் குறைந்த விலையில் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

இணையம் - onlinekathir.com

## உறைக்கும் உண்மை

அரசுத் தலைவரின் புதன்கிழமை கொள்கை விளக்க உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஒரு வார்த்தைகூடப் பேசப்படவில்லை என்பதைநாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் நேற்றுத் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் நாடு மிக மோசமான பொருளாதார மற்றும் கடன் நெருக்கடிகளில் இருந்து மீண்டு வருவதற்கான அறிகுறிகள் குறித்துத்தான் பேசினார், ஆனால் அவர் கையாள வேண்டிய மிக முக்கிய பிரச்சினையைத் தொடாமலேயே விட்டுவிட்டார் என்பதைத்தான் சுமந்திரன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

1948 ஆம் ஆண்டு இலங்கை பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுபட்ட பின்னர் இலங்கையை ஆட்டிப்படைக்கும் இனப் பாகுபாடு தீர்க்கப்படாமல் இலங்கைக்கு விடிவு இல்லை என்பதை கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவே பல தடவைகள் வெளிப்படையாகக் கூறியுள்ளார், ஆனால் அவர் இன்று அது பற்றி வாயே திறக்க மறுக்கிறார்.

1958 இல் இனக் கலவரங்களுக்கு வழிவகுத்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவர், எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் சிங்களவர் மட்டும் கொள்கை, அவரின் படுகொலையை அடுத்து அனுதாப அலையில் பதவிக்கு வந்த அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க கொண்டுவந்த குடியரசு அரசியலமைப்பு, அதன் மூலம் கொண்டு வரப்பட்ட கல்வித் தரப்படுத்தல் என்பன எல்லாமும் சேர்ந்துதான் ஆயுதப் போராட்டத்தை, வன்முறையைத் தீவிரப்படுத்தியிருந்தன. அவற்றுக்கு எந்தவகையிலும் குறைந்தது அல்ல ரணில் விக்கிரமசிங்கவின் செயலும்.

இதுபோன்றகடந்தகாலஅரசியல்பிழைகள்1983 இல்இனக்கலவரங்களுக்குவழிவகுத்தது,மேலும் 25ஆண்டுகாலஉள்நாட்டுப்போருக்கும்காரணமாக இருந்தது. அதனால் ஏற்பட்ட இழப்புக்களே பொருளாதார நெருக்கடிக்கான முதன்மைக் காரணம்என்றுசுமந்திரன்சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்தப் போரால் பன்னாட்டுச் சமூகத்தின் முன் போர்க் குற்றவாளியாகக் கூடிய ஏதுநிலையில் கொழும்பு தொடர்ந்தும் அச்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. இதுமுதலீடுகளைப் பாதிக்கின்றது. அப்படியிருக்கும்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார முன்னேற்றத்தை அடையமுடியும் என்கிற ரணிலின் எதிர்பார்ப்பு யதார்த்தமானது அல்ல.

இனப்பிரச்சினை விடயத்தில் தேர்தல் வரைக்கும் அமைதி காத்து சிங்களவர்களின் வாக்குகளைப் பெற்று அரசுத் தலைவரானதும் தீர்வு காண்பேன் என்கிற சப்பைக்கட்டு வாதங்கள் இங்கு எடுபடாது. அப்படி சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்ற பின்னர், அதனை மீறி ஒருபோதும் செயற்படமுடியாதவராக ரணிலின் கைகள் கட்டிப்போடப்படும். எனவே ரணில் தனது போக்கை இப்போதே மாற்றிக்கொள்வது அவசியம்.

# பழகுவோமா

என் சத்திய மூர்த்தி

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் 'சிவாஜி' திரைப்படத்தில் வரும் 'பழகுவோமா' பகுதியை யாரும் மறந்திருக்க முடியாது, அண்மையில் ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திசநாயக்காவின் இந்தியப் பயணம் அது போன்ற ஒன்றுதான். அதற்காக அ திரைப்பட காட்சி போல் அது ஒரு பகடிப் பயணமும் அல்ல. பகடி விடயமும் அல்ல.

ரோஹண்ண விஜயவீர, ஜேவிபி-யை ஒரு ஆயுதம் தாங்கிய போராளி குழுவாக உருவாக்கிய கடந்த அறுபது ஆண்டுகளாக, இந்திய அரசுடன் இத்தகைய உயர்மட்ட பேச்சு அப்பட்டமாக நடந்தது இல்லை. கீழ் மட்டத்தில், இலைமறைவு, காய்மறைவு தொடர்புகள் இருந்திருக்கலாம். அது சர்வதேச அரங்கில் சாதாரணமான விடயம்தான். என்றாலும், ரோஹண்ணா காலம் முழுமைக்கும் இந்திய அரசு ஜேவிபி -உடன் எந்த உறவும் பேணவில்லை.

ரோஹண்ணவின், கட்சி தொண்டர்களுக்கான 'ஐந்து வகுப்புகள்' என்ற அடைமொழிக்குள் அடங்கும் 'மூன்றாவது வகுப்பு' அவரது 'இந்திய மேலாத்திக்கம்' என்ற கருத்தியலைத் தழுவியது. அவர் தலைமையிலான இரண்டு ஆயுதப் போராட்டங்களும் தோல்வியில் முடிந்ததை தொடர்ந்தும், அவரது சர்ச்சைக்குரிய இறப்பிற்குப் பின்னரும், ஜே.வி.பி. ஜனநாயகப் பாதையை தேர்ந்தெடுத்தது. அது உள்நாட்டு அரசில் விடயத்தில் ஏற்பட்ட அணுகுமுறை மாற்றம் மட்டுமே.

### கலப்பபமில்லாத கற்பனை

ஜேவிபி, இன்றுவரை, இந்தியாவிற்கு எதிரான கொள்கையை அதிகாரபூர்வமாக அகற்றவில்லை. என்றாலும், இரண்டாவது ஆயுதப் புரட்சியின்போது, ஒரு காலகட்டத்தில் இந்தியா, அன்றைய வளரும் ஜேவிபி தலைவர்களில் ஒருவரான சோமவன்ச அமரசிங்கவை இலங்கை இராணுவத்திடமிருந்து காப்பாற்றியது என்று தென்னிலங்கை செய்திகள் கூறின. பிற்காலத்தில், சோமவன்ச, ஜேவிபியின் பொது செயலாளராக சுமார் இருபத்தைந்து ஆண்டு காலம் கோலோச்சினார். என்றாலும், கட்சியின் இந்தியா சார்ந்த கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஜேவிபி-யைப் பொறுத்தவரையில், அண்டை நாடான இந்தியா, இலங்கையைக் கபளிகரம் செய்யக் காத்திருப்பதாக உண்மையிலேயே நம்பினார்கள். அதற்கு, எந்தவிதமான ஆதாரங்களும் அவர்களிடம் இருக்கவில்லை. தேவையாகவும் இல்லை. அது அவர்களுடைய அறிவார்த்தமான அணுகுமுறையில் தோன்றிய கலப்படமில்லாத கற்பனை. என்றாலும், 2004ஆ-ம் ஆண்டு இறுதியில் சுனாமி அனர்த்தம் இலங்கையைத் தாக்கிய போது, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் அரசு கோரிக்கையை முன்வைப்பதற்கு முன்னரே, இந்தியா அனைத்து உதவிகளையும் போர்க் கால அடிப்படையில் முன்னெடுத்தது. இலங்கையில் அப்போது நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்ட இந்திய வீரர்கள், எந்தவிதத்திலும், உள்நாட்டு விடயங்களில் தலையிடவில்லை. அவர்கள் நாட்டு மக்களிடம் அரசியல் பேசியதாகவும் ஜேவிபி தலைமைக்கு செய்தி பரவவில்லை.

அது மட்டுமல்ல. அவர்கள் வந்த காரியம் முடிவடைந்ததும், இந்திய படையினர் தங்களது நாட்டிற்கு காலதாமதம் எதுவும் செய்யாமல் திரும்பிச் சென்றனர். இது ஜேவிபி தலைவர்களும் தொண்டர்களும் எதிர்பாராத விடயம். அதைத் தொடர்ந்து, இந்தியா மீது அவர்கள் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினாலும், அதனைப் பொது மேடைகளில் அறிவிப்பதற்கு அவர்களுக்கு தேவையான மனப்பக்குவம் இருக்கவில்லை. அதுவே இன்றளவும் தொடருகிறது.

### அர்த்தமில்லாத தியாகம்?

கடந்த 1987ஆம் ஆண்டு, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, இலங்கை -- இந்திய ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, இந்திய அமைதிப் படையினர் இலங்கையை வந்தடைந்தனர். பிற்காலத்தில், தமிழ் தரப்பினர் அமைதிப் படையை எதிர்த்துப் பரப்புரை செய்தனர். அதன் பின்னால் விடுதலை புலிகள் அமைப்பு இருந்தது. அந்த பரப்புரை இன்றளவும் தொடர்கிறது.

அந்தக் காலகட்டத்தில், ஜேவிபி அமைதிப் படைக்கு எதிராக தொடங்கிய போரட்டமே அவர்களது இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியாக அறியப்படுகிறது. என்றாலும், இந்தியப் படையினருக்கு எதிராக விடுதலை புலிகள் அமைப்பு தனியாகவே போராடியது. ஜேவிபி இலங்கை இராணுவத்துடன் மோதியதில், ஆண்- பெண் என்று சுமார் ஒரு இலட்சம் போராளிகள் உயிரிழந்திருப்பார்கள் என்று பிற்காலத்தில் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

குறிப்பாக இரண்டாவது ஆயுதக் கிளாச்சிக்கு



இந்தியாவையும், அமைதிப்படையையும் காரணம் காட்டிவிட்டு, அடுத்தடுத்த காலங்களில், தனது கருத்தை மாற்றிக்கொண்டதாகக் காட்டிக்கொள்ள ஜேவிபி-ன் பிற்கால மிதவாத அரசியல் இடம் கொடுக்கவில்லை. அவ்வாறு செய்தால், இரண்டாவது ஆயுத கிளர்ச்சிக்கும் அதில் உயிரிழந்த ஒரு இலட்சம் சிங்கள இளைஞர்களின் 'தியாகத்திற்கும்' அர்த்தமில்லாமல் போய்விடும். கருத்தியல் அரசியல் செய்யும் ஜேவிபிக்கு அது ஏற்புடையதல்ல.

### இரண்பாம் பட்சம்

சமகால தென்னிலங்கை அரசியல் சூழலில், இந்தியாவிற்குச் சென்று திரும்பி இருந்தாலும், ஜேவிபி, இந்தியாவுக்கு எதிரான பழைய கொள்கை முடிவுகளையும் முஸ்தீபுகளையும் மாற்றிக்கொள்ளுமா, என்பது கேள்விக்குரிய விடயமே. கடந்த 2012ஆ-ம் ஆண்டு கட்சியில் இருந்து பிரிந்து சென்ற குமார் குணரத்தினத்தின் 'முன்னிலை சோஷலிச கட்சியின்' முன்னெடுப்புகளுக்குப் பயந்து, ஜேவிபி, இந்திய பாதையில் மெதுவாகவே பயணிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

2022ஆ-ம் ஆண்டு தென்னிலங்கையில் அரங்கேறிய 'அரகலயா' போராட்டத்தில், ஜேவிபி முன்னிலை வகித்ததாக முதலில் வந்த செய்திகள் கூறின. என்றாலும் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியபோது, அதன் ஒரு பகுதியாகவே தென்னிலங்கையில் போராட்டகாரர்கள் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டபோது, ஜேவிபி பின்வாங்குவதாகத் தெரிந்தது. அந்தச் செயல்களின் பின்னால், முன்னிலை சோஷலிசக் கட்சி இருப்பதாகவே சமூக வலைதள செய்திகள் கூறின. குணரத்தினம் தலைமையும் அந்தச் செய்திகளை மறுக்கவில்லை.

தற்போது, ஜனாதிபதி தேர்தல் காலத்தில், காணாமலே போய்விட்டதாக கருதப்படும் முன்னிலை சோஷலிச கட்சியும் தமிழரான குமார் குணரத்தினத்தின் தலைமையும், ஏதாவது வாய்ப்பு கிடைத்தால், அதனை பிடித்துக்கொண்டு மீண்டும் தலைதூக்க முயலும். அவர்களது அரசியல் முக்கியமாக ஜேவிபி சார்ந்தது, அல்லது எதிர்ப்பது. தேசிய அரசியல்கூட அவர்களுக்கு இரண்டாம் பட்சம்தான். இது, தேர்தல் முடிவுறும் காலம் வரை, அனுர தலைமையை யோசிக்க வைக்கும்.

### அவசியம் , ஆதங்கம்

இந்தியாவை பொறுத்தவரையில். ஜேவிபி தலைமையுடனான பேச்சு பழகுவதற்காக மட்டுமே. குறிப்பாக, இரு நாட்டு ஒத்துழைப்பு மற்றும் பிரச்சினைகள் குறித்து. இந்தியாவின் உண்மையான நிலைபாடுகளை ஜேவிபி தலைமை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும் என்ற அவசியம் மற்றும் ஆதங்கமும், இந்தப் பேச்சுகளின் பின்னால் இருந்தன.

இதுவரை, இந்தியா குறித்த ஜேவிபி தலைமையின் எண்ணங்கள் எல்லாம் பத்திரிகை செய்திகள் மூலமும் தங்களை ஒத்த அறிவுஜீவிகளின் கலப்படமில்லாத தவறான, தாறுமாறான ஆய்வு கட்டுரைகள் மூலமும் மட்டுமே கிடைத்து வந்திருக்கிறது. அந்த நிலைமை மாற, குறிப்பாக, அனுர நினைத்தால் அலைபேசி மூலம் மூத்த இந்திய தலைவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும்.

தற்போதைய சூழலில், இரு தரப்பினருக்கும் இத்தனை ஆண்டு காலத்திற்கும் சரியான தொடர்புகள் இல்லாததும் கடந்த கால குழப்பங்களுக்குக் காரணம். குறிப்பாக, இந்திய எதிர்நிலை என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் மட்டுமே அரசியல் செய்து வந்த ஜேவிபி, இந்திய அரசு பிரதிநிதிகளுடன் சந்தித்து பேசினால் தாங்கள் சோரம் போய்விடுவோம் என்று பயந்தார்கள். அதைவிட முக்கியமாக, அவ்வாறு சோரம் போய்விட்டதாக தங்கள் ஆதரவாளர்கள் கருதுவார்கள் என்று அதைவிடப் பயந்தார்கள்.

இந்தப் பின்னணியில் 2002 - 20-04 காலகட்டத்தில் இலங்கைக்கான இந்திய தூதுவரான நிருபன் சென்னின் பதவிக் காலத்தில் மட்டுமே, ஜேவிபி தலைமை இந்தியாவுடன் ஏதோ ஒரு விதத்தில் தொடர்பில் இருந்தது. அதற்கு முன்னரும் பின்னரும் (12ஆம் பக்கம் பார்க்க..)

# சங்கர்புரத்தில் ஏரி378 புதிய நெல் இன அறுவடைவிழா





(வி.ரி. சகாதேவராஜா)

றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்குப்பட்ட சங்கர்புரம் கிராமத்தில் புதிய வெள்ளை நெல்லினமான ஏரி 378 முன்மாதிரியாக செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையின் அறுவடை புதன்கிழமை வெற்றிகரமாக நடைபெற்றது.

றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்குப் பொறுப்பான விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.கிலசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிறுவகத்தின் விவசாய ஆராய்ச்சி நிபுணர் கே.ரோகண திலகசிறி உதவி விவசாய பணிப்பாளர்களான எஸ்சித்திரவேல், திருமதி நித்தியா நவரூபன் ஆகியோர் அதிதிகளாகவும் தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கர்புரம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் மண்டூர் பிரதேச விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

முன்மாதிரி துண்டச் செய்கையை விவசாய போதனாசிரியரின் ஆலோசனைக்கேற்ப தயாபரன் எனும் விவசாயி சிறப்பாக செய்கை பண்ணிய வயல்நிலத்தில் விவசாய உத்தியோகத்தர்களால் நெல் அறுவடை செய்யப்பட்டு பயிர்வெட்டு அளவீடு மூலம் விளைச்சல் கணிக்கப்பட்டது.

இம்முறை சாதகமற்ற காலநிலை நிலவிய போதிலும்கூட இந்த இனமானது நோய்பீடை என்பவற்றுக்கு எதிர்ப்பு சக்தி நிறைந்ததாகவும் நல்ல விளைச்சலை கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரும் இனமாக இதனை எதிர்வரும் போகத்திலிருந்து இப்பகுதி விவசாயிகள் செய்கைபண்ண எதிர்பார்த்துள்ளனர்.

(05)

# யானை – மனித மோதலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகோள்

(பாறுக் ஷிஹான்)

யானை - மனித மோதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நீதிக்கான மையம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில் தெரிவித்தார்.

யானை - மனித மோதலைத் தடுக்க நீதிக்கான மையம் மேற்கொண்ட சட்ட நடவடிக்கை தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு நீதிக்கான மையத்தின் சாய்ந்தமருது காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற வேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குறித்த ஊடக மாநாட்டில் நீதிக்கான மையம் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயிலுடன் நீதிக்கான மையத்தின் பிரதித் தலைவர் யூ.கே.எம்.றிம்சான் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோர் இணைந்திருந்தனர்.

இதன்போது மேலும் தெரிவித்தவை வருமாறு -

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசம் யானைகள் வாழ்கின்ற பிராந்தியம் அல்ல. குறிப்பிட்ட காலங்களில் அம்பாறை மாவட்டத்தினுள் வருகின்ற யானைகள் அம்பாறை மாவட்ட யானைகள் இல்லை. வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு யானைகள் இங்கு விடப்படுவதான குற்றச்சாட்டு ஆராயப்பட வேண்டியுள்ளது.

தற்போது இவ்விடயம் பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் யானை-மனித மோதலுக்கான தீர்வு பெற்றுக்கொள்ளப்படவில்லை.இதனால் யானை - மனித மோதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி எழுத்தாணை மனு தாக்கலை எமது அமைப்பு மேற்கொண்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுவொன்று கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 5 வருடங்களில் யானைகளின் தாக்குதலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் கிழக்கு மாகாணம் இரண்டாவது இடத்தில் காணப்படு கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் உயிரிழப்பு அதிகமாகக் காணப்படுவதாகவும் இதற்கு தீர்வு வழங்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் திணைக்களம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு எதிராக எமது அமைப்பு குறித்த எழுத்தாணை மனுவை தாக்கல் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார். (05)

# அட்டாளைச்சேனையின் முதல் மருத்துவர் ஓய்வு

(கே.எ.ஹமீட்)

*அட்டாளைச்சேனை மண்ணின் மைந்தரும் ஊரின் முதலாவது வைத்தியரும் தமது சம காலத்தில் அட்டாளைச்சேனை , பாலமுனை மற்றும் ஒலுவில் போன்ற வைத்தியசாலைகளில் பொறுப்பு வைத்தியராக கடமை செய்தவரும் தற்போது அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் வைத்தியராக கடமை புரியும் வைத்தியர் சம்சுதீன் கியாஸ்தீன் 38 வருடங்கள் சுகாதார துறையில் வைத்தியராக சேவை செய்து 12 ஆம் திகதியிலிருந்து சுகாதார சேவையில் இருந்து ஓய்வு நிலை அடைகிறார்.*

*(05)*



## குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# இடை நிறுத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான காப்புறுதித் திட்டம் அடுத்த ஆண்டு மீள அமுல்



(எப்.முபாரக்)

இடை நிறுத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான காப்புறுதி திட்டத்தை அடுத்த ஆண்டு மீண்டும் அமுல்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம் என ஊடக அமைச்சின் செயலாளர் வி. பி. கே. அனுஷா பல்பிட்ட தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சால், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ், கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி பட்டறையை நேற்று தொடக்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர் பட்டய நிறுவனத்தை உருவாகுவதற்கு ஊடக அமைச்சு சகல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவகிறது. இது அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்டாலும், ஒரு சுதந்திர ஊடக நிறுவனமாகவே அது இருக்கும். அதற்கான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டிருக்கிறது. சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டு, ஆறு மாதங்களில், அவற்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்தப் பட்டய நிறுவனத்தின் மூலம் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். ஊடகவியலாளர்களின் தொழில் வாண்மை விருத்திக்கு உதவி புரியும், தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப ஊடகவியலாளர்கள் மாறுவது போன்ற அனுகூலங்கள் கிடைக்கும்.

ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்க நெறி கோவையை, ஊடகவியலாளர்களே உருவாக்க வேண்டும். இதனை அமைச்சரோ அமைச்சோ செய்து வழங்குவது, உங்களுக்கு கௌரவமாகாது.

முழு நேர ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கும் ஊடக அமைச்சு யோசனை ஒன்றைக் கொள்கை அளவில் முன்னெடுத்து வருகின்றது என்றும் தெரிவித்தார்.

தங்குமிட வசதியுடன் கூடிய இரண்டுநாள் வேலைத்திட்டமாக செயற்படுத்தப்படும் இந்த பயிற்சிப்பட்டறையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 50 ஊடகவியலாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

திருகோணமலை அலெக்ஸ் தோட்டம் அனந்தம ஹோட்டலில் இந்த செயலமர்வு நடைபெற்றது. இந்த செயல் அமர்வின் அதிதி உரையை கிழக்கு பல்கலைக்கழக மொழி மற்றும் தொடர்பாடல் திணைக்களத் தலைவர் கலாநிதி வ. ஜே. நவீன் ராஜ் வழங்கினார்.

குற்றவியல் அறிக்கைகள் தொடர்பான வளவாளராக சுதர்சன குணவர்த்தன, சத்துரங்க கப் ஆராய்ச்சி, என். எ. விஜய் நாயக்க ஆகியோரும் தனியுரிமை தகவல் தொடர்பான வளவாளர்களாக மந்தான இஸ்மாயில், ஜகத் லியனாரச்சி, உரேகா வெலரத்ன ஆகியோரும், அனுபவப் பகிர்வு குழுநிலை வளவாளராக மந்தான இஸ்மாயில் கே.பி. ஜெயந்த ஆகியோரும் தவறான செய்திகள் மற்றும் வெறுப்பு பேச்சு தொடர்பான வளவாளர்களாக மஹிந்த பதிரான,

டபிள்யு.பி. செவாண்டி ஆகியோரும் கலந்து கொண்டனர். (05)





# தம்பலகாமத்தில் நடமாடும் சேவை

(ஹஸ்பர் ஏ.எச்)

பிறப்பு,இறப்பு மற்றும் திருமண பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நேற்று(வியாழக்கிழமை) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்றது. இதில் பிறப்பு, இறப்பு, திருமண பதிவுச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்காக சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை சிக்கல்களைத் தீர்த்தல், காணி பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெறல் என பல சேவைகளை பொது மக்கள் இதன் போது பயனடைந்தனர்.

இதில் மாகாண காணி ஆணையாளர் தசநாயக்க, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(05)



## குறுகிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கைமத்தியவங்கியினால், கடந்த வருடம் ஜனவரி 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன்களை வழங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த கட்டுப் பாடுகளை தளர்த்துவதன் மூலம், சந்தையில் வட்டி வீதம் வீழ்ச்சிய டையும் வேகம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## சாந்தனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தரப்பினால் மேற்கொள்ளப் படவுள்ளது

## ஜனாதிபதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுகிறது.

இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகள் மற்றும் இந்து சமுத்திரத்தை அதிகமாகப் பயன்படுத்தும் ஏனைய நாடுகளைப் பாதிக்கும் பொதுவான அபிலாஷைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்து சமுத்திர மாநாடு 2016 இல் ஆரம்பிக்கப்பட்டது.

'நிரந்தரமான மற்றும் நிலையான இந்து சமுத்திரத்தை நோக்கி' என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த ஆண்டு மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதான உரை நிகழ்த்த உள்ளார்.

இம்முறை மாநாட்டில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் 40 நாடுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பங்கேற்புடன் வரைபடம் ஒன்றும் தயாரிக்கப்படும். மாநாட்டுடன் இணைந்ததாக இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்தும் பல உயர்மட்ட கலந்துரையாடல்களிலும் ஜனாதிபதி பங்கேற்க உள்ளார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் இணைந்து கொள்ளவுள்ளதோடு, 'எங்கள் நீல எதிர்காலம் : இந்து சமுத்திர வளங்களின் இருப்பைப் பாதுகாப்பதற்கு பிராந்திய தீவு நாடுகளுடன் இணைந்து செயற்படுவதெப்படி?' என்ற தலைப்பில் வெளிவிவகார அமைச்சர் உரையாற்றவுள்ளார்.

7 ஆவது இந்து சமுத்திர மாநாட்டை இந்திய வெளியுறவு அமைச்சு மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் இணைந்து இந்திய மன்றம் ஏற்பாடு செய்துள்ளது. சிங்கப்பூர் எஸ்.ராஜரத்தினம் சர்வதேச கல்வி நிலையம் மற்றும் அவுஸ்திரேலியாவின் பெர்த்-அமெரிக்கா ஆசியா மையம் ஆகியவை இதற்கு பங்களிக்கின்றன.

2ஆவது இந்து சமுத்திர மாநாடு 2017ஆம் ஆண்டு அப்போதைய பிரதமரும், ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இலங்கையில் நடைபெற்றது நினைவூட்டத்தக்கது.

## தவிசாளர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர் குழாத்திற்கு உள்ளடக்குவதற்குத் தன்னால் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

இதற்கு அமைய, சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப், வேலு குமார், மயந்த திசாநாயக்க, இம்ரான் மஹ்ரூப், ஹர்ஷண ராஜகருணா, ரோஹினீ குமாரி விஜேரத்ன, ஹேஷா விதானகே, (திருமதி) கோகிலா குணவர்தன, சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த, சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், சட்டத்தரணி மதுர விதானகே, வீரசுமன வீரசிங்ஹ, சமன்பிரிய ஹேரத், கலாநிதி ஹரினி அமரசூரிய, ஜகத் சமரவிக்ரம ஆகியோர் தவிசாளர் குழாத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளனர்.




தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir




# சைவ மரபுக்கு இலக்கணம் வகுத்த துறவி

சூரியனார் கோயிலாதீனம் என்பது பழைமையான சைவ ஆதீனங்களில் ஒன்று. இந்த ஆதீனத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் அப்படி ஒரு நெருக்கம் உண்டு. அது பலரும் அறியாத ஒன்று.

இது நிற்க, இந்த ஆதீனத்தின் 27 ஆவது மகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க சுவாமிகள் 102 ஆவது வயதில் கடந்த மாதம் பரிபூரணம் அடைய, 28 ஆவது குரு மகாசந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் பீடாரோகணம் செய்துள்ளார்.

அதெல்லாம் சரி, அதற்கும் யாழ்ப்பாணத்திற்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்பீர்கள்.

1900 களின் ஆரம்பத்தில் இந்த ஆதீனத்தில் மகாசந்நிதானமாக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகள். அவரின் முதன்மை சீடராக விளங்கியவர் இலக்கணசுவாமி என்ற ஸ்ரீமத் முத்துக்குமார தம்பிரான்.

இவர் வண்ணார்பண்ணையில் பிறந்தவர். 14 ஆவது வயதிலேயே தமிழகம் சென்று சூரியனார் கோயில் ஆதீனத்தில் தீட்சைகளும் துறவறமும் பெற்று தம்பிரான் சுவாமிகளாக விளங்கினார்.

தமிழிலும் வடமொழியிலும் ஆழமான அறிவுடைய இவர் தாம் இன்று சிவஞான முனிவர் எழுதிய சிவஞான போத மாபாடியம் கிடைக்க காரணமானவர்.

அதற்கு வழிகாட்டியவர் சூரியனார் கோயில் ஆதீன மகாசந்நிதானம். அக்காலத்தில் குறித்த மாபாடியம் ஏடு திருவாவடுதுறை ஆதீனத்தில் மிக இரகசியமாக பாதுகாக்கப்பட்டு வந்தது.

இந்த ஏட்டை மிக நம்பிக்கைக்கு உரியவர்களன்றி ஏனையோர் தொடவும் அனுமதிக்க மாட்டார்கள். பக்குவமற்றோர் கையில் அந்த விடயம் சேரலாகாது என்ற எண்ணமே அதற்கு காரணமாயினும், அச்செயலால் தமிழ் சைவ சித்தாந்த நூல்களின் முதன்மையான குறித்த நூலும் நூற் கருத்தும் அறிஞர்களிடத்தில் சென்று சேராதிருந்தது.

ஆகவே, யாழ்ப்பாணத்து இலக்கண சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஒடுக்கத்தில் தனக்கு வாசிக்க கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி மன பாடம் செய்து பின் யாருமறியாத வகையில், எழுதி நூலாக்கி பதிப்பித்தார்.

இது அக்காலத்தில் பழைமை வாதிகளின் கண்டனத்திற்கு உள்ளானாலும் சைவபெருமக்களாலும் ஆதீன சந்நிதானங்களாலும் வியந்து பாராட்டப்பட்டது. போற்றப்பட்டது.

14 வயதில் தமிழகம் சென்ற இவர் இலங்கைக்கு மீண்டு வரவே இல்லையாம். அப்படி ஒரு துறவழகும் சைவப்பற்றும் துணிந்து கருமம் ஆற்றும் பண்பும் கொண்டவர் சுவாமிகளாம்.

மேலும் சூரியனார் கோயிலாதீன ஸ்தாபகர் சிவாக்ரயோகிகள் (சிவக்கொழுந்து சிவாச்சார்யார்) அவர்களின் முதன்மை சீடரான வீழி சிவாக்ரயோகிகள் அருளிய சிவாக்ரபாஷ்யம் மற்றும் கிரியா தீபிகை என்ற சம்ஸ்கிருத நூல்களையும் இவரே பதிப்பித்துள்ளார்.

1949 ல் சிதம்பரத்தில் பரிபூரணம் அடைந்த சுவாமிகளின் சமாதி தருமை ஆதீன தெற்கு மடத்தில் உள்ளதாம்.



இந்த யாழ்ப்பாண சுவாமிகள் சைவ சமய மரபுகளுக்கு இலக்கணம் வகுத்ததால் இலக்கண சுவாமிகள் என்றழைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் பற்றி 1940களில் யாழ்ப்பாணம் வந்த புகழ்பெற்ற அறிஞரான ஈசான சிவாச்சார்யாரே இங்குள்ளவர்களுக்கு வெளிப்படுத்தினார் என்றும் சொல்வார் உளர்.

இவ்வாறாக யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பெரியவர் அண்மைக்காலத்தில் துறவறம் பூண்டு சைவ உலகிற்கே மாபாடியம் பதிப்பித்துப் பெரும் பணி செய்ய வித்திட்டது சூரியனார் கோயிலாதீனம் ஆகும்.

இத்தகு ஆச்சார்யர்களின் பணிகளை நினைவு கூருவதும் வணங்குவதும் எமக்கும் எம் மரபிலும் சமயத்திலும் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் வலுப்படுத்தும் எனலாம்.

நீர்வை. மயூரகிரி சிவாச்சார்யார்

## தேவாரப் பொழிப்பு

பாடல் எண் : 1 பண் : இந்தளம்

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே.

**பொழிப்புரை:**

செந்நெல் விளையும் அழகிய வயல்களை உடைய சோலைகளின் அயலிடங்களில் வளமையான புன்னை மரங்கள் உதிர்த்த பூக்கள், வெண்மையான துணியிற் பவளங்கள் பரப்பினாற் போல விளங்கும் திருப்பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில், நல்ல தேவர்கள் நெருங்கிவந்து, தங்களின் முடிகளைத் தோய்த்து வணங்கும் திருவடிகளை உடைய இறைவரே! பின்னிய உமது செஞ்சடையில் இளம் பிறையை அதற்குப் பகையாகிய பாம்போடு வைத்துள்ளது ஏனோ? சொல்வீராக.





# சைவ ஆதீனங்களின் மரபும் பணியும் நடை முறைமையும் தனித்துவமானது

அது முக்கியமாக, சைவத்தமிழரசர்களின் காலத்துக்குப் பின் சைவ மரபைக் காக்கவும் பெருங்கோயில் நிர்வாகங்களை ஒருங்கிணைக்கவும் உருவான அமைபபாகும். அதனால் ஆதீன முதல்வர்களை அரசர்கள் போல நோக்கும் மரபும் உள்ளது.

துறவிகளால் மட்டுமன்றி ஆதீனங்கள் பாரம்பரிய மரபு வழி இல்லற ஆச்சார்யர்களின் வழிகாட்டுதலிலும் இயங்கின. இயங்கி வருகின்றன.

அவ்வாறு தந்தை பின் தனயன் என்று இல்லற மரபு ஆச்சார்யர்களை குருமகா சந்நிதானமாக பேணி வருவது பழைமையான வேளாக்குறிச்சி ஆதீனம்.


இந்த ஆதீனம் திருவாரூர் தியாகேசர் பேராலய நிர்வாகத்தில் பெரும் பங்கேற்பது. இதன் தலைமையம் திருப்புகலூரில் உள்ளது.

நீர்வேலி போன்ற யாழ்ப்பாணத்து ஊர்களில் வாழ்ந்த சிவாச்சார்யர்களில் பலரும் இந்த திருப்புகலூரில் சென்று சிவபூஜை எழுந்தருளச் செய்து வரும் மரபுடையவர்களாக விளங்கினர்.

அது போல, நீர்வேலி சிவ சங்கர பண்டிதர் அவர்களும் திருப்புகலூரில் சென்று தம் சம்ஸ்கிருதப்புலமையை வளர்த்து கொண்டதாக குறிப்புகள் உள்ளன.

ஏனெனில் திருப்புகலூரில் ஒரு சிவாகம பாடசாலை பிரபலமாக 19 ஆம் நூற்றாண்டில் இருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

அவ்வாறு எம்முடன் தொடர்புகள் மிகுந்த திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் தற்போதைய மகாசந்நிதானம் இன்றும் இவற்றை புதுப்பிக்கும் ஆர்வமுடையவராக இருப்பது கவனித்தற்குரியதாகும்.



நீர்வை. தி. மயூரகிரி சிவாச்சார்யார்

# வெளிவாரி மாணவர்களிடம் மன்னிப்பு கேட்டார் தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் ரமீஸ்!

(கே எ ஹமீட்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக - கலைமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக 2014ஃ2015ஆம் ஆண்டு பதிவு செய்தவர்களுக்கு, 10 வருடங்களின் பின்னர் பட்டம் வழங்கப்படவுள்ள நிலையில், இந்தக் கால தாமதத்துக்காக சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் பல்கலைக்கழகம் சார்பில் மன்னிப்புக் கோருவதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 16ஆவது பட்டமளிப்பு விழா - எதிர்வரும் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது. இது குறித்து தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் யூ.எல். மப்றூக் எழுப்பிய கேள்யொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே, உபவேந்தர் ரமீஸ் - குறித்த மாணவர்களிடம் மன்னிப்புக் கோருவதாக கூறினார்.

ஊடகவியலாளர் மப்றூக் எழுப்பிய கேள்வி என்ன?

'இந்தப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி யாக கலைமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக 2014ஃ2015 ஆம் ஆண்டில் சுமார் 2500 பேர் பதிவு செய்தனர்.

மூன்று அல்லது நான்கு வருடங்களுக்குள் நிறைவுசெய்யப்பட வேண்டிய அவர்களின் அந்தப் பட்டப்படிப்பு, 10 ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டது.

இந்த நிலையில் 16ஆவது பட்டமளிப்பு விழாவில் மேற்படி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் 45 வயதுக்குள்தான் ஒருவர் அரச உத்தியோகம் ஒன்றைப் பெறமுடியும். ஆனால், ஒரு பட்டப்படிப்புக்கு 10 ஆண்டுகளை நீங்கள் இழுத்தடித்தமையால், 45 வயது தாண்டிய நிலையில், அரச உத்தியோகம் ஒன்றைப் பெற முடியாதவர்களாக மேற்படி மாணவர்களில் பலர் பட்டங்களைப் பெறவுள்ளனர். இவர்களுக்கு நீங்கள் என்ன கூறப்போகிறீர்கள்? என, ஊடகவியலாளர் மப்றூக் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் 'ஈஸ்டர் தின தாக்குதல் மற்றும் கொரோனா போன்ற விடயங்களால் அந்த மாணவர்களின் பட்டப்படிப்பை நிறைவு செய்வதில் காலதாமதமாகி விட்டது. அதற்காக பல்கலைக்கழகம் சார்பாக நாங்கள் மன்னிப்புக் கேப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை. எங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாலான சில காரணங்களால் இந்தத் தாமதம் நிகழ்ந்து விட்டது.

ஆனால் இனி அவ்வாறு நடக்காது. வெளிவாரி பட்டப்படிப்பு நிலையத்தின் தற்போதைய பணிப்பாளர் மிகவும் அர்ப்பணிப்புடன் - உரிய காலங்களில் படிப்புகளை முடிக்க வேண்டும் என்பதில் செயற்பட்டு வருகின்றார்.

குறிட்ட காலத்துக்குள் பட்டப்படிப்புகளை - இனி நிறைவு செய்ய வேண்டும் என, அவரிடம் நான் கூறியிருக்கிறேன்.

இவ்வாறான காலதாமதங்கள் எமது பல்கலைக்கழகத்தின் பெயருக்கும் புகழுக்கும் இழுக்கை ஏற்படுத்துவனவாக உள்ளன. - என்றார்.





### உபவேந்தர் சொன்னவை சரிதானா?

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக - கலைமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வற்காக 2014ஃ2015ஆம் ஆண்டு பதிவுகள் நடைபெற்ற போது, அந்தப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக எம். எம். நாஜிம் பதவி வகித்தார். 2021ஆம் ஆண்டு நடுப்பகுதியில்தான் உபவேந்தர் பதவியிலிருந்து நாஜிம் விலகிச் சென்றார்.

21 ஜ/ன் 2021ஆம் ஆண்டுதான் - தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகப் ரமீஸ் அபூபக்கர் பதவியேற்றார்.

ஆனால், 2014ஃ2015ஆம் ஆண்டு கலைமாணி பட்டப்படிப்புக்காக வெளிவாரியாக பதிவு செய்தவர்களின் முதலாமாண்டு - முதல் பருவத்துக்கான பரீட்சை முடிவு 2018ஆண்டுதான் வெளியாகியது. அதாவது 06 பருவங்களைக் கொண்ட 03 வருங்களுக்குரிய மேற்பபடி பட்டப் படிப்பின் ஒரு பருவத்தை நிறைவு செய்வதற்கே, 04 வருடங்கள் இழுத்தடிப்புச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த 04 வருடங்களிலும் ஈஸ்டர் தாக்குதல் அல்லது கொரோனா போன்ற எந்த அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. இவர்களின் இந்தப் பட்டப்படிப்பு - இவ்வாறு இழுத்தடிப்புச் செய்யப்பட்டமைக்கு, முன்னாள் உபவேந்தர் எம்.எம். நாஜிம்தான் பிரதான காரணமாக இருந்தார் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

எனவே, 2014ஃ2015ஆம் ஆண்டுக்குரிய மேற்படி பட்டப்படிப்புக்காக பதிவு செய்தவர்களின் படிப்புக் காலம் 10 வருடங்கள் இழுத்தடிக்கப்பட்டமைக்கு - ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொரோனா போன்றவை காரணமாக இருந்தன என்பதில் முழுமையான உண்மைகள் இல்லை.

### படிப்பைக் கைவிட்ட பெருந் தொகை மாணவர்கள்

வெளிவாரியாக பட்டப்படிப்பை மேற்கொள்கின்றவர்களில் பெரும்பாலானோர் திருமணமானவர்கள், தொழில் செய்து கொண்டே படிப்பவர்கள், குடும்பத்துக்காக உழைப்பவர்களாவர்.

அந்தவகையில் 2014ஃ2015ஆம் ஆண்டு வெளிவாரியாக கலைமாணி பட்டப்படிப்புக்காக பதிவுசெய்த சுமார் 2500 பேரில் பலர் - பட்டப்படிப்புக் காலம் இழுத்தடிக்கப்பட்டமையால் தமது படிப்பை - இடையில் கைவிட்டுச் சென்று விட்டார்கள்.

இன்னும் பலர் - இந்தப் படிப்புக் காலம் இழுத்தடிக்கப்பட்டமையால் அதற்குரிய பரீட்சைகளில் வெற்றிகரமான முடிவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இவ்வாறான நிலையில்தான் மேற்படி 2500 மாணவர்களில் 644 மாணவர்கள் மட்டுமே, எதிர்வரும் பட்டமளிப்பு விழாவில் தமக்குரிய பட்டங்களைப் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள்.

அதிலும் சிலர் 10 வருடங்கள் தமது படிப்பு இழுத்தடிக்கப்பட்டமைக்கு - தங்கள் எதிர்ப்பை வெளியிடும் வகையில், பட்டமளிப்பு விழாவை புறக்கணிப்பதென்றும், அந்த விழாவில் பங்கேற்று தமது பட்டங்களைப் பெறுவதில்லை எனவும் முடிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## பாண் எடையைச் சரிபார்க்க மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு

(கே எ ஹமீட்)

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விற்பனைக்காக தயாரிக்கப்படும் பாண்களின் நிறை குறித்து வர்த்தக நிலையங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, ஆரையம்பதி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி ஆகிய நகரப் பிரதேசங்களில் இயங்கும் ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்களில் பாண்களின் எடை தொடர்பான சுற்றிவளைப்புக்கள் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டன என அதன் மாவட்டப் பொறுப்பதிகாரி என். எம். சப்ராஸ் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் -

திங்கட்கிழமை தொடக்கம் புதன்கிழமை பி.ப. 4.00 மணி வரை 30 இற்கும் மேற்பட்ட ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்கள் பரிசோதனை செய்யப்பட்டதுடன், குறைந்த நிறையில் பாண்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அத்துடன் பாண்களின் விலைகளை வெளிப்படுத்தாமை, முறையான லேபல் இடப்படாமை போன்ற குற்றங்களுக்காக 05 பாண் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஒரு இறாத்தல் பாண் 450கிராம் காணப்பட வேண்டும் என்பதுடன் அவசியமாயின் 13.5 கிராம் நிறைக் குறைவிற்கும் அரை இறாத்தல் பாண் 225 கிராம் 9 கிராம் எடைக் குறைவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொதி செய்யப்பட்ட, சேமித்து வைக்கப்பட்ட, விற்ப னைக்கு வழங்கப்படும், விற்பனைக்காகக் காட்டப்படும் அல்லது சில்லறை அல்லது மொத்தமாக விற்கப்படும் தயாரிக்கப்பட்ட எந்த வகைப் பாணும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான எடையைக் கொண்டிருக்க வேண்டும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள பாணின் எடையை காட்சிப்படுத்துமாறு அனைத்து வர்த்தகர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.அத்துடன் எதிர்காலத்தில் இச்சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அதிகார சபை மேலும் தெரிவித்தது.

(05)

## 2024இன் முதல் விவசாய கூட்டம் கிளிநொச்சியில் நடந் தேறியது

*கிளிநொச்சி மாவட்ட விவசாய குழு கூட்டம் நேற்று (வியாழக்கிழமை) கிளிநொச்சி மாவட்ட அர சாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வ ரன் தலைமையில் நடை பெற்றது.*

*கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட விவசாய பணிப்பாளர் கமநல சேவை திணைக் களத்தினர், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், கமநல காப்புறுதி திணைக்களம், விவசாய அமைப்புகள், விவசாய போதனா ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.*

*கலந்துரையாடலை 2024 ஆம் ஆண்டுக்கான சிறு போக செய்கையில் 100 வீத நெற்றியை ஈடுபடுத்த வேண்டும் எனவும் தற்பொழுது குளங்களை நீர்மட்டம் கொள்ளளவு மட்டத்தில் காணப்படுவதன் காரணமாக உரிய காலத்தின் நெற்செய்கை ஆரம்பிக்கப் படுமாயில் கடந்த காலங்களிலும் பார்க்க அதிகமான அளவு நெற்செய்தி மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு அமைவாக நெற்செய்கை ஆரம்பிக்கப்படும் என தீர்மானம் எட்டப்பட்டுள்ளதுடன் தரிசு நிலங்களில் உப உணவு பயிற்சியை மேற்கொள்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் தீர்மானங்கள் எட்டப்பட்டன.*

*அத்துடன் வீதிகளில் நெல்லினை உலரவிடுவதை தவிர்த்துக கொள்ளவேண்டும் எனவும் வீதிகளில் உலரவிடும் நெல்கள் வீதிகளில் உள்ள காபற்றில் காணப்படுகின்ற நச்சுத்தன்மை மனித உடலுக்கு பலவகை நோய்களை ஏற்படுத்தகூடும் எனவே வீதிகளில் நெல்லை உலரவிடுவதை தவிர்க்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.*

*அத்துடன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -*

*தற்பொழுது பல பகுதிகளிலும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற நெல் கொள்வனவில் பாரிய மோசடி இடம் பெறுவதாக பல தரப்பினரும் குற்றச் சுமத்தி வேறு நிலையில் இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளிடமிருந்து அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அத்துடன் நெல் கொள்வனவில் அளவிடப்படும் தராசுகளில் சந்தேகங்கள் ஏற்படுமாயின் உடனடியாக மாவட்ட செயலகத்திற்கு தகவல் வழங்கப்படுமாயின் உடனடியாக அப்பகுதிகளை நெல் கொள்வனவில் ஈடுபடும் தராசுகள் பார்வையிடப்படும் எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.*

*(05- 113)*

## காரைதீவில் வறிய மக்களுக்கு புளொட் அமைப்பால் உதவிகள்

(த. தர்மேந்திரா)

காரைதீவு பிரதேசத்தில் உள்ள வறிய மற்றும் வாழ்வாதாரம் குன்றிய 50 குடும்பங்களுக்கு புளொட் அமைப்பால் நேற்று (வியாழக்கிழமை) நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 300 குடும்பங்களுக்கு கடந்த மாத நடு பகுதியில் புளொட் அமைப்பு முதல் கட்டமாக நிவாரண பொதிகளை வழங்கி இருந்தது.

புளொட் அமைப்பின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ப. ரவிச்சந்திரனின் (சங்கரி) சிந்தனையின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்ட வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அமைப்பின் ஜேர்மன் கிளையை சேர்ந்த தோழர்கள் நிதி பங்களிப்புகளை வழங்கினார்கள். (05 -23)

# பொருளாதார - அரசியல் பிரச்சினைகளுக்கு ஆட்சி மாற்றத்தின் மூலமே தீர்வு கிடைக்கும்

## அடித்துக்கூறுகிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

ஆட்சி மாற்றமொன்றின் ஊடாகத் தான் பொருளாதாரப் பிரச்சினைக்கும் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வினைக் காண முடியும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் தேர்தல் தொடர்பாக ஒரு வசனம் ஏதும் உள்ளதா? எம்முடன் இருந்தபோது இருந்த ரணில் விக்கிரமசிங்க அல்ல தற்போது ஜனாதிபதியாக இருப்பவர்.

அல்லாவிட்டால், அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்குமா?

ஜனாதிபதித் தேர்தல் உடனடியாக நடைபெற வேண்டும். இதனை நடத்த ஒக்ரோபர்வரை காத்திருக்க வேண்டிய தேவை கிடையாது. மக்கள் ஆட்சி மாற்றமொன்றை விரும்புகிறார்கள். எனவே, அரசாங்கம் இதற்கு செவிசாய்க்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்த, எம்மால் முடியுமான அனைத்து ஒத்துழைப்புக்களையும் நாம் செய்யத் தயாராகவே உள்ளோம்.

ஆட்சி மாற்றமொன்றின் ஊடாகத் தான் பொருளாதாரப் பிரச்சினைக்கும் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வினைக் காண முடியும். - என லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)



# முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்

அங்கவீனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு ஜனவரி மாதம் முதல் அமுலாகும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் ஷேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, 5,000 ரூபாவாக இருந்த அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு 7,500 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

2,000 ரூபாவாக இருந்த முதியோர் கொடுப்பனவு 3,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பயனாளி குடும்பங்களில் உள்ள அங்கவீனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுடையவர்கள் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் அடையாளம் காணப்படவுள்ளனர்.

இவர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் ஷேமசிங்க குறிப்பிட்டுள்ளார். (05)

# தரிசு நிலத்தில் அறுவடை



யாழ்ப்பாணம் - சுழிபுரத்தில் நெல் வயலாக மாற்றப்பட்ட தரிசு நில காணியில் பொதுமக்களால் நேற்று (வியாழக்கிழமை) அறுவடை மேற்கொள்ளபட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட திருவடிநிலை மீள் குடியேற்ற பகுதியில் உள்ள குகன் குல சங்கத்தினருக்கு உரித்தான காணிமில் 60ஏக்கர் தரிசு நிலக் காணி சுழிபுரம்மேற்கு வாழ் பொதுமக்கள் ,புலம்பெயர் தேசத்தவர்கள் ,கலைமகள் விளையாட்டு கழகத்தினரால் பசுமை புரட்சி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த பகுதியானது நெல்வயலாக மாற்றப்பட்ட நிலையில் நேற்று அறுவடை முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் புலம்பெயர் தேச உறவுகள் சார்பில் முத்தையா ஞானவேல் ,வனிதா ரவீந்திரன்,பசுமை புரட்சி திட்ட குழுவினர்களான நாராயணன் சபாரத்தினம்,சைலசுதா, கனகசபை ரவீந்திரன் ,சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டு கழகத்தினர்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# மோசமான நிர்வாகத்தின் விளைவே வற் அதிகரிப்பு

## சம்பிக்க காட்டம்



அரசாங்கத்தின் மோசமான பொருளாதார முகாமைத்துவத்தின் காரணமாகவே வற் வரி அதிகரிப்பு ஏற்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் பாட்லி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிர்வகிப்பதன் மூலம் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி பின்னர் பொருளாதார அபிவிருத்திக்கான திருத்தப்பட்ட செயற்திட்டமொன்று ஆவணப்படுத்தப்பட வேண்டுமென சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது நிர்ணயித்த 16 இலக்குகளை தற்போதைய அரசாங்கம் முழுமையாக நிறைவேறவில்லை என்றும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (05)

# ஆனந்தா – நாலந்த கிரிக்கெட் சமர் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி




இலங்கையின் ஆனந்தா கல்லூரிக்கும், நாலந்தா கல்லூரிக்கும் இடையிலான 94 ஆவது மெறூன்களின் கிரிக்கெட் சமரை மிகச் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த போட்டிகள் எஸ்.எஸ்.சி. மைதானத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மேலும் இந்த இரண்டு பாடசாலைகளும் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் பலரை உருவாக்கியதுடன் அவர்களில் பலர் இலங்கை அணிக்காக விளையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# கள்ளத் தராசைப் பயன்படுத்திய வியாபாரிகள் மீது வழக்கு பதிவு



மட்டக்களப்பில் கள்ளத்தராசைப் பயன்படுத்தி விவசாயிகளை மோசடி செய்த 8 வியாபாரிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் தற்போது வேளாண்மை அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில், விவசாயிகளிடம் இருந்து வெளிமாவட்ட வியாபாரிகள் கள்ளத் தராசினைப் பயன்படுத்தி நெல் கொள்வனவில் ஈடுபட்டுவருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனையடுத்து அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட அளவீட்டு திணைக்கள பணிப்பாளர் வி.விக்கினேஸ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விஷேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே 8 வியாபாரிகள் குறித்த மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த வியாபாரிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (05)

# இறங்குதுறை பிரச்சினை குறித்து ஆளுநருடன் மீனவர்கள் சந்திப்பு

தமது இறங்குதுறைப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்று தருமாறு கோரி யாழ். சாவல்கட்டு மீனவர்கள் நேற்று (வியாழக்கிழமை) வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பின் போது கடற்றொழில் அமைச்சரிடம் கலந்துரையாடி சரியான தீர்வை பெற்றுத்தருவதாக ஆளுநர் தமக்கு உறுதியளித்துள்ளார் என மீனவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமது இறங்குதுறைப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி சாவல்கட்டு மீனவர்கள் கடந்த 06 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறைத் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் இருவர் போராட்டம்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியின் முன்னால் இரண்டு வருகைதரு விரிவுரையாளர்கள் வியாழக்கிழமை நான்காவது நாளாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

வசீம் நப்றீஸ் ஆகிய குறித்த இரு விரிவுரையாளர்களும் சம்மாந்துறை தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் தியாகராஜாவிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

இதேவேளை விவசாய டிப்ளோமா வருகை தரு விரிவுரையாளரான நிருசனா புள்ளநாயகம் என்பவரையும் இடைநிறுத்தவுள்ளதாக தெரி விக்கப்பட்ட நிலையில் , 'அவரை இடைநிறுத்தக் கூடாது அவர் எங்கள் கல்வி வளர்ச்சிக்குத் தேவை' எனத் தெரிவித்து மாணவர்கள் கையொப்பமிட்ட மகஜரையும் அதிபரிடம் கையளித்தனர்.

இதை மீறி செயற்பட்டால் ஆர்ப்பாட்டத்தில் இறங்குவோம் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பணிப்பாளர் நாயகத திற்கு நான் அறிவிக்கிறேன் என அதிபர் கூறிய போது, நாங்கள் ஏற்கனவே அறிவித்துவிட்டோம் என விவசாய சங்கத்தின் பொருளாளர் சியாப் தெரிவித்தார்.

'மாணவர்கள் இல்லாத வகுப்பிற்கு புதன்கிழமை ரிவிஈசி அங்கீகாரம் எடுத்துள்ளீகள் திறமையாக செயற்பட்ட விவசாய கள உதவியாளர் பாடநெறிக்கு ரிவிஈசி அங்கீகாரம் இல்லை ஏன் இந்த அநீதி? விவசாய பாடநெறிகளை நீங்கள் சதித்திட்டம் மூலம் இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்', என விவசாய சங்கத்தின் பொருளாளர் சியாப் அதிபரிடம் கேள்வி எழுப்பினார்.

இதனைத்தொடர்ந்து அதிபர் மாணவர்களிடம் எதிர்வரும் புதன்கிழமை வரை கால அவகாசம் கேட்டுள்ளார். (05)

# அலிசாஹிர் மௌலானாவுடன் இந்திய துணை தூதர் சந்திப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய துணைத் தூதுவர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அலி சாஹிர் மௌலானாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பிலுள்ள விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் சமகால விவகாரங்கள், அபிவிருத்தி, சமூக, கல்வி, கலாசார மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து துணைத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர் நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக எடுத்துக் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா, அவற்றுக்கான தீர்வு முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடினார்.

இவ்வாறான விடயங்களில் இந்தியாவினது வகிபாகம் தொடர்பில் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகவும் இச்சந்திப்பு திருப்திகரமாக அமைந்திருந்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (05)

# திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முசாரப் சம்மாந்துறை மஜ்லிஸ் அஸ்ஸூறா அமைப்பினர் சந்திப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறைக்கு அண்மையில் விஜயம் செய்த திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் சம்மாந்துறை மஜ்லிஸ் அஸ்ஸூறா மற்றும் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையின் தலைவரும், முன்னாள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருமான ஐ.எம்.ஹனீபா, மஜ்லிஸ் அஸ்ஸூறா தலைவரும், முன்னாள் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான எம்.ஐ.எம்.அமீர் மற்றும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் எம்.ஐ.எம்.றனூஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஏ.சீ.எம்.சஹீல் உள்ளிட்ட அச்சபைகளின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)



# வண்ணை சிறீ வீரமாகாளி அம்பாள் இரதோற்சவம்

வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணை சிறீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் இரதோற்சவம் நேற்று (வியாழக்கிழமை) பக்திபூர்வமாக நடைபெற்றது.

கடந்த முதலாம் திகதி அன்று அலங்கார உற்சவத்துடன் ஆரம்பமாகிய இத் திருவிழாவில் நேற்று இரதோற்சவமும், இன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதுடன் நாளை மாலை அலங்கார பூந்தண்டிகை உற்சவம் நடைபெற்று திருவிழா இனிதே நிறைவடையும்.

இந்நிலையில் நேற்று இடம்பெற்ற இரதோற்சவ திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# மாணவனுக்குக் கௌரவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சீ.ஐ.சீ.நிறுவனத்தில் கடமையாற்றும் உத்தியோஸ்தர்களின் பிள்ளைகள் கல்வித்துறையில் ஏற்படுத்தியிருக்கும் சாதனைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

சீ.ஐ.சீ.நிறுவனத்தின் தொண்டு மற்றும் நலன்புரி அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் நிறுவனத்தின் மனிதவள முதன்மை அதிகாரி அருண ஜயசேகர, பிரதம கணக்காளர் எரந்தி விக்கிரம ஆராய்ச்சி மாணவனின் பெற்றோர்களான எம்.ஜே.எம்.சியாம், ஏ.சம்சுல் மிர்பியா ஆகியோர் பங்கேற்றனர்.

ஒவ்வொரு வருடமும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் 9 பாடங்களில் ஏ சித்தி, க.பொ.த.உயர்தர பரீட்சையில் 3 ஏ சித்தி மற்றும் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு போன்ற துறைகளுக்கு தெரிவு செய்யப்படும் பிள்ளைகளுக்கு இந் நிறுவனம் கௌரவம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

# திருகோணமலை மாணவர்களுக்கு கற்றல் உதவித்திட்டம் முன்னெடுப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்)

கோல் கீப்பர் ராஜா நினைவாக அன்பே சிவம் அறக்கட்டளையின் கீழ் லண்டன் வாழ் இமானுவல் ஜெரோம்நாகராஜ் மகேந்திர ரவி நிதிப்பங்களிப்பில் திருகோணமலை வாழ் மாணவர்களுக்கான கற்றல் உதவித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த உதவித்திட்டம் திருகோணமலை மாவட்டத்தில்

தி/ கும்புறுபிட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் மிகவும் வறுமைக்கோட்டில் வாழும் மாணவர்களுக்கு வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (05)

# அயோத்தி செல்கிறார் நாமல் ராஜபக்ச எம்.பி.



இரண்டு நாள் விஜயமாக அயோத்தி ராமர் கோவிலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதன்படி இன்று(வெள்ளிக்கிழமை) மாலை அவர் ராமர் கோவிலில் சிறப்பு தரிசனம் மற்றும் பூஜை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது அவர் அயோத்தி மற்றும் டெல்லியில் உயரதிகாரிகளை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பழகுவோமா...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களுடைய தொடர்புகள் அற்று பேயிருந்தன. இந்தியப் பயணத்திற்கு முன்னர், ஜேவிபி தலைவர்கள், தற்போதைய இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்துப் பேசியதும் குறிப்பிடதக்கது.

**அதிரடி முடிவு அல்ல**

ஜேவிபி தலைமையின் இந்தியப் பயணம் என்பது, அதிரடி முடிவு அல்ல. முன்னதாக, கட்சித் தலைவர் அனுர, அதிரடியாக அமெரிக்க தூதுவர் ஜீலி சங் அம்மையாரை பலமுறை சந்தித்துப் பேசியுள்ளார். குறிப்பாக, 'அரகலயா' காலகட்டத்தை ஒட்டி துவங்கிய இந்த சந்திப்புகள் இன்றளவும் தொடர்கின்றன. அதன் காரணமாகவே, அனுர வகையாறாவினர், சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவுக்கும் பயணம் மேற்கொண்டிருந்தனர். கட்சித் தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் சந்திப்பதற்காக அந்த பயணம் மேற்கொள்ளப்பட்டதாக ஜேவிபி அறிவித்தது. அந்தப் பயணத்தின்போது, அனுர, அமெரிக்க அதிகார மையத்தில் யாரையும் சந்தித்தாக தகவல் இல்லை. அண்மைக் காலங்களில், ஜேவிபி தலைமை, குறிப்பாகக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான அனுர, சர்வதேச நாணய நிதியத்துடனான அரசின் கடன் ஒப்பந்தம் குறித்துப் புதிய கருத்துக்களை தெரிவித்து வருகிறார். எடுத்தோம், கவிழ்த்தோம் என்ற கட்சியின் கடந்த கால நிலையில் இருந்து மாறி தாங்கள் ஆட்சிக்கு வந்தால், தற்போதைய கடன் உடன்படிக்கையை மீள்பரிசோதனை செய்து, புதிய பேச்சுக்கள் மூலம் மாற்றி அமைக்க முயலுவோம் என்று மட்டுமே கூறி வருகின்றனர். பழைய காலம் என்றால், அந்த ஒப்பந்தத்தை இந்திய பெருங்கடலில் தூக்கி வீசுவோம் என்பது போன்ற கருத்துக்களையே அவர்கள் தெரிவித்திருப்பார்கள்.

ஜேவிபி தலைமையை பொறுத்தவரையில், எதிர்கட்சியில் இருந்து ஆளும் கட்சிக்கு உரிய மனநிலையைப் பெறுவதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள். பதவியில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளையும் செயல்பாடுகளையும் எதிர்க்கவேண்டியது, காலத்தின் கட்டாயம். அது போன்றே, தற்போதைய தேர்தல் அரசியல் சூழலில், தங்களை நிதானப்படுத்திக்கொள்வதும் அதன் மூலம் தேர்தல் வெற்றி என்ற இலக்கை நோக்கி நகர்வதும் அவர்களுக்குத் தேவையான ஒன்று. எப்போது, வழமையான மூன்று சதவீத வாக்கு வங்கியில் இருந்து, தற்போதைய கருத்துக்கணிப்புகள் கூறும் 30 – –40 சதவீதமான வாக்காளர்கள் ஆதரவு இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரிந்ததோ, அப்போதே, அந்த பரந்துபட்ட அரசியல் வெளியில் நிலைநிற்பதற்கு இது போன்ற வலதும் இல்லை, முன்னை போல் முழுவதும் இடமும் இல்லை என்ற நடுநிலை அரசியலில் இடம் தேடுவது அவர்களுக்கு முன் எப்போதும் இல்லாத அவசியம். அவர்களின் தேர்தல் வெற்றிவாய்ப்பு குறித்த கருத்துக்கணிப்புகளின் முடிவுகளை உண்மையான தேர்தலில் தக்கவைத்துக்கொள்வதற்கும் இது மிகமிக அவசியம்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.02.2024இல் வெளியிடப்பெற்றது.